**IN THE COURT OF SUB COURT, USILAMPATTI**

**O.S. No.314 / 2019**

**Dated: 13.07.2026**

Name : பாண்டி (DW1)

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

நானும் என் தாயாரும் ரூ .50,000/- கடனை எந்த தேதியில் வாங்கினோம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் திரும்ப கொடுக்கப்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரிதான் . வாதி மற்றும் அவரது தாயார் மீதும் எந்த தேதியில் புகார் அளித்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான் . புகார் மற்றும் மனு ஏற்பு ரசீதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை . 22.02.2021 ம் தேதியிட்ட என்னிடம் காட்டப்படும் எனது தரப்பில் தாக்கல் செய்த வக்காலத்தில் உள்ள கையெழுத்து உங்களுடையதா என்றால் இல்லை . 29.07.2025 ம் தேதியிட்ட என்னிடம் காட்டப்படும் எனது தரப்பில் தாக்கல் செய்த Change of Vakalath உள்ள கையெழுத்து உங்ளுடையதா என்றால் இல்லை. இந்த வழக்கில் இருந்து தப்பிக்க வேண்டியும் வாதியிடம் வாங்கிய கடனை திரும்ப கொடுக்காமல் தப்பிக்க வேண்டியும் மாற்றி மாற்றி கையெழுத்து செய்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் கையெழுத்து எதுவும் செய்யவில்லை வக்கீலிடம் மட்டும் கையெழுத்து போட்டு கொடுத்தேன் . நானும் என் தாயாரும் அய்யனார் முன்னிலையில் 20.10.2017 அன்று ரூ.3,60,000/- கடன் வாங்கினேன் என்றால் சரியில்லை நான் ரூ .50,000/- தான் கடன் வாங்கினேன் ரூ .20,000/- வட்டியுடன் சேர்த்து ரூ.70,000/- கொடுத்துவிட்டேன். வாதிக்கு நானும் என்

தாயாரும் புரோநோட்டு எழுதிக்கொடுத்து அதில் நான் கையெழுத்து செய்து என் தாயார் இடது கை பெருவிரல் ரேகை செய்துவிட்டோம் என்றாலும் அவ்வாறே Revenue Stamp லும் செய்துள்ளோம் என்றாலும் நானும் கையெழுத்து போடவில்லை என் அம்மாவும் கைரேகை வைக்கவில்லை என் அம்மா இறந்து 5 ஆண்டுகள் ஆகிறது. என் இறந்துவிட்டதால் உண்மையை மறைத்து வாதிக்கு தரவேண்டிய கடன் தொகையை தராமல் ஏமாற்றுவதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியில்லை. வட்டி அதிகமாக கேட்டு தகராறு செய்ததாகவும் அதற்கு புகார் அளித்தகாகவும் குறிப்பிட்டுள்ளேன் , அவ்வாறு நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் அவ்வாறு புகார் அளித்திருந்தால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் வழகிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் சரியில்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

L MAHESWARI

Digitally signed by L MAHESWARI
Date: 2026.07.13 11:51:13 +0530

Sub Judge,
Usilampatti.